2005 மார்ச் 18]

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்: *(அ) மற்றும் (ஆ) எடப்பாடி நகராட்சி மற்றும் சுற்றுப்புற பகுதிகளுக்கு சரபங்கா நதி தாழ்வான பகுதியிலும் பெரிய ஏரி உயர்மட்டப் பகுதியிலும் அமைந்துள்ளது. எனவே, பெரிய ஏரிக்கு கழிவுநீர் கொண்டு செல்ல தொழில்நுட்ப ரீதியாக இயலாத சூழ்நிலையில் உள்ளது.*

[**குறிப்பு:**—*ஓர் உரையின் தொடக்கத்தில் (*) இடப்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

2. கவன ஈர்ப்பு

தளி தொகுதியில் வனத் துறை மூலம் சாலைகள் அமைத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை விதி 55–ன்கீழ், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. திரு. கேவி. முரளிதரன் அவர்கள், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். திரு. கே.வி. முரளிதரன்.*

***திரு. கே.வி. முரளிதரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தளி தொகுதியில் உடுபுராளி கூட்டு ரோடு முதல் அத்திநத்தம் வரை, கேரட்டி முதல் கெம்பக்கரை வரை மற்றும் ஜவளகிரி முதல் சென்னமாளம் வரை வனத் துறை மூலமாக புதிய தார்ச் சாலைப் பணிகள் தொடங்க வேண்டிய அவசியம் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.*

***மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கான விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.*

[2005 மார்ச் 18

அறிக்கை

தமிழ்நாடு அரசாணை எண் 147, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 27–9–2004–ன்படி கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பிரதம மந்திரி கிராமச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம், 2004–2005–ன்கீழ், 31.050 கி.மீ. தூரமுடைய சாலைப் பணிகளை ரூ.481.980 இலட்சம் மதிப்பீட்டில் அமைத்திட நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. அதில் பின்வரும் 3 சாலைப் பணிகளும் அடங்கும்.

	கி.மீ.	மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்)
(1) தளி முதல் சென்னமங்கலம் வரை சாலை அமைத்தல்	7.600	124.200
(2) அஞ்செட்டி உரிகம் சாலை முதல் அத்திநத்தம் வரை சாலை அமைத்தல்	9.400	157.200
(3) அஞ்செட்டி–நாட்றாம்பாளையம் சாலை முதல் கெம்பக்கரை வரை சாலை அமைத்தல்	7.500	119.700
மொத்தம்	24.500	401.100

கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் கேட்கப்பட்டுள்ள சாலைப் பணிகளுக்கான நிதி ஒதுக்கீடு, மத்திய அரசிடமிருந்து பெறப்படவில்லை. மேற்படி சாலைகள் அமைக்கத் தேவையான தொகை பெறப்பட்டவுடன் சாலைப் பணிகள் ஆரம்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

திரு. கே.வி. முரளிதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையை நன்றாகப் படித்துப் பார்த்தேன். மேற்படி சாலைப் பணிகள், மத்திய அரசிடமிருந்து தொகை வந்தவுடன் தொடங்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். சந்தோஷம். ஆனால், அந்தத் தொகை வந்தவுடனே, உடனடியாக வனத் துறைக்கு டெபாசிட் செய்ய முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசாணை எண் 147, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 27–9–2004–ன்படி, கிருஷ்ணகிரி மாவட்டத்தில், பிரதம மந்திரி

2005 மார்ச் 18] [திரு. கே.பி. அன்பழகன்]

கிராமச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம், *2004–2005*–ன்கீழ், *31.050* கிலோமீட்டர் தூரமுடைய சாலைப் பணிகள் ரூ.*481.980* இலட்சம் மதிப்பீட்டில் அமைத்திட, நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. அதில் கீழ்க்கண்ட மூன்று சாலைப் பணிகளும் அடங்கும்:

ஜவளகிரி முதல் சென்னமாளம் வரை சாலை அமைத்தல்

அஞ்செட்டி உரிகம் சாலை முதல் அத்திநத்தம் வரை சாலை அமைத்தல்

அஞ்செட்டி–நாட்றாம்பாளையம் சாலை முதல் கெம்பக்கரை வரை சாலை அமைத்தல்

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களால் கவன ஈர்ப்பில் குறிப்பிட்ட மூன்று சாலைகளும், மேற்சொன்ன மூன்று சாலைப் பணிகளில் அடங்கும். இச்சாலைப் பணிகள் வனத் துறையின் மூலம் செயல்படுத்தப்பட உள்ளது. இப்பணிகளுக்கான நிதியொதுக்கீடு ஏதும் மத்திய அரசிடமிருந்து, கிருஷ்ணகிரி மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையால் இதுவரை பெறப்படவில்லை. இந்தச் சூழ்நிலையில், வனத் துறைக்கு மேற்படி சாலைகளை அமைக்கத் தேவையான தொகையை உடனடியாக வழங்க இயலாத நிலை உள்ளது.

திரு. கே.வி. முரளிதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசிடமிருந்து தொகை பெறப்படவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். தொகை வந்தவுடனே, அந்தத் தொகையை வனத் துறைக்கு deposit செய்து, உடனடியாக அந்த சாலைப் பணிகள் ஆரம்பிக்கப்பட வேண்டும். ஏற்கெனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், ஒகேனக்கல் சாலைக்கு *2* கோடி ரூபாய் *2003*–லே sanction பண்ணி, இரண்டு வருடமாக வனத் துறைக்கு deposit பண்ணாமல், இந்த வருடம்தான் start பண்ணியிருக்கிறார்கள். ஆகவே, மத்திய அரசிடமிருந்து P.M.G.S.Y. திட்டத்தின்கீழ் சாலைப் பணிகளுக்கான தொகை வந்தவுடனே, வனத் துறைக்குக் கொடுத்து, உடனடியாக அந்த சாலைப் பணிகள் நிறைவேற்றப்படுமா என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த நாட்றாம்பாளையம் – ஒகேனக்கல் சாலையானது, நெடுஞ்சாலைத் துறை மூலமாக மேற்கொள்ளப்பட்ட சாலை. அந்தத் தொகை வனத் துறைக்கு ஒதுக்கப்பட்டு, அந்தப் பணி இப்போது நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. ஆனால், ஜவளகிரி முதல் சென்னமாளம்

[திரு. கே.பி. அன்பழகன்] [2005 மார்ச் 18

வரை செல்கின்ற சாலை, அஞ்செட்டி உரிகம் முதல் அத்திநத்தம் வரை செல்கின்ற சாலை, அஞ்செட்டி – நாட்றாம்பாளையம் முதல் கெம்பக்கரை வரை செல்கின்ற சாலை ஆகிய மூன்று சாலைகளும் வனப் பகுதி வழியாகச் செல்வதால், அவற்றை வனத் துறையின் மூலமாகச் செயல்படுத்துவ்தற்கு ஒப்படைக்கப்பட உள்ளது. இப்பணிகளுக்கான தொகையினை வனத் துறைக்கு வழங்க வேண்டுமாயின், வனத் துறையினை பிரதம மந்திரி கிராமச் சாலைகள் திட்டச் செயலாக்கப் பிரிவாக அங்கீகரிக்க வேண்டும். இதற்கான கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது. அக்கருத்துருவுக்கு ஒப்புதல் அளிக்கும் வரை, தற்காலிகமாக வனத் துறை மேற்கொண்ட பணிகளுக்கான பட்டியல் தொகையினைத் திட்ட அலுவலர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலமாக பட்டுவாடா செய்வதற்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. முரளிதரன், இரண்டு கேள்விகள் கேட்டுவிட்டீர்கள். முடிந்துவிட்டது. உட்காருங்கள்.

3. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். டாக்டர் மு. தம்பிதுரை.

டாக்டர் மு. தம்பிதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003–2005 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் 170 மற்றும் 171 ஆகிய இரண்டு அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(ஆ) அரசு உறுதிமொழிக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். திரு. லா. சந்தானம்.

திரு. லா. சந்தானம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003–2005 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் 35–வது அறிக்கையைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.